**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C . 40-2024 Date : 22.11.2024 LW.3 /P.W.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலகிருஷ்ணன் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | மணிமாறன் | வட்டம் | |
| ஜாதி | | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | பூ.மாம்பாக்கம் | வயது | 49 |
| 1ம் எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை....**

நான் பூ.மாம்பாக்கம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 , 2 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். அ.சா.2 என் தங்கை. போனவருடம் இதே மாதம் இதே நாள் காலை 7 மணிக்கு நடந்தது. அ.சா.2 நடக்கும் பாதையில் இருந்த முள்ளை வெட்டினார். களைக்கட்டு காம்பை எடுத்துவந்து வெங்கடேசன் என் தங்கை முதுகு, கண் ஆகிய இடங்களில் அடித்தார். கீதா, ரம்யா, செந்தாமரை ஆகியோர் என் தங்கை மாறாப்பு துணியை இழுத்துபோட்டு குச்சியால் அடித்தார்கள். அடிபட்டதால் அ.சா.2 கீழே கிடந்தார். அவரதுமகன் செல்வமணி உளுந்தூர்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார், பின்பு மேல்சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு சென்றார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பு வழுங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Judicial Magistrate-I,
Ulundurpet.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C. 40/2024 Date : 22.11.2024 LW.2 /P.W.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவலட்சுமி | ஆதார் எண் | |
| கணவர் பெயர்; | தன்ராஜ் | வட்டம் | |
| ஜாதி | | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | மாம்பாக்கம் | வயது | 42 |
| 1ம் எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை....**

நான் மாம்பாக்கம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி. எதிரிகளை தெரியும். போனவருடம் நவம்பர் மாதம் காலை 7 மணிக்கு நான் தெருவில் தண்ணீர் பிடிக்க போகும்போது பாதையில் முள் இருந்ததால் அதை வெட்டுவதற்காக போனேன். அப்போது வெங்கடேசன் , கீதா, ரம்யா, செந்தாமரை நால்வரும் களைக்கட்டு காம்பை எடுத்துவந்து, வெங்கடேசன் என்னை வலது கண்ணிலும், இடது தோளிலும், நெஞ்சிலும், முதுகிலும் அடித்தார். கீதா, ரம்யா, செந்தாமரை ஆகியோர என் முடியை பிடித்து இழுத்து கையால் முதுகில் அடித்தார்கள். வெங்கடேசன் குடித்துவிட்டு என்னை தேவிடியா, உனக்கு என்ன இங்கு வேலை என்று அசிங்கஅசிங்கமாக திட்டினார். எனக்கு காயமானவுடன் என்னை என் மகன் தமிழ்செல்வன் உளுந்தூர்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றான், பின்பு மேல்சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு சென்றேன். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Judicial Magistrate-I,
Ulundurpet.